**உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் கமத்தொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்**

**ஒருவர் தானாக முன்வந்து காணித் துண்டை திட்ட செயற்பாடுகளிற்காக நன்கொடையளிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

தன்னார்வ அடிப்படையில் நன்கொடையளிப்பதற்கு திட்டம் ஒரு போதும் ஊக்கமளிப்பதில்லை. ஆனால் திட்டத்தின் பயனாளியிடம் இருந்து அல்லது பயனாளிகளிடம் இருந்து நன்கொடையாக வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றை நிராகரிப்பதற்கும் திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்ற சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட குழுக்கள், விவசாய உற்பத்திக் குழுக்கள் மற்றும் ஏனைய உள்ளுர் நிறுவனங்களுக்கே உரிமை உள்ளது. சந்தர்ப்பத்தின் போது நன்கொடையாக காணித் துண்டை பயனாளியிடம் இருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்கின்ற போது திட்டம் பின்வரும் விடயங்களை சரியாகக் கவனித்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- யாராவது தானாக முன்வந்து திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கிய காணித் துண்டில் எந்தவொரு கட்டுமான செயற்பாட்டையோ சொத்துக்களையோ கொண்டிருக்கவில்லை.
- நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டு மிகச் சிறியதாக இருக்க வேண்டும். அதாவது நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டு காணி உரிமையாளருக்குச் சொந்தமான மொத்தக் காணித் தொகையின் பத்து வீதத்தை விடக் குறைவானதாக இருக்க வேண்டும். இந்தக் காணியை நன்கொடையாக வழங்குவதால் வாழ்வாதாரம் உட்பட காணி உரிமையாளருக்கு எந்தவொரு எதிர்மறையான பாதிப்பும் இல்லை.
- தானாக முன்வந்து நன்கொடையாக வழங்கிய முறை மற்றும் தன்மை பற்றி முழுமையாகவும் சுதந்திரமாகவும் சரிபார்க்கப்படுதல்.
- இந்தக் காணியை நன்கொடையாக வழங்குவதால் வாழ்வாதாரம் உட்பட எந்தப்பாதிப்பும் இல்லை என்பதுடன், காணி உரிமையாளருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. நுன்கொடையாக வழங்கப்பட்ட காணி அவருடைய காணி அளவின் பத்து வீதத்தை விட அதிகமானதாக இல்லை. அத்தோடு பௌதீக ரீதியாக எந்தவொரு இடமாற்றமும் ஏற்பட மாட்டாது.
- திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டு பின்வரும் விடயங்களுக்குள் உட்பட்டிருக்கவில்லை (காணி ஆக்கிரமிப்பாளர்கள், ஆக்கிரமித்துள்ளவர்கள், மரங்கள், பயிர்கள், கட்டுமானங்கள், கட்டமைப்புக்கள் உட்பட ஏனையவை, அடகு, ஈடு அல்லது குத்தகை முதலான கடமைகள், கடன்களுக்கான பிணைகள்).
- நன்கொடையாக வழங்கப்பட்ட காணி தவிர எஞ்சியுள்ள சொத்துக்கள் பொருளாதார ரீதியாக நிலைத்திருப்பதுடன் வாழ்வாதாரம் மற்றும் அவர்களது தங்குமிடத்திற்கும் போதுமானதாக இருக்கின்றது.
- உள்ளுர் அல்லது சமுதாய மட்ட மனக் குறைகளைத் தீர்க்கும் முறைமை ஒன்று நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
- காணித் துண்டை வழங்குபவரிடம் காணி உறுதிப்பத்திரம் உட்பட நன்கொடையாக வழங்கப்பட்ட காணித்துண்டு சட்ட செயன்முறையூடாக நிறுவனத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

காணி உரிமையாளர் காணித் துண்டை அன்பளிப்பாக வழங்கியதற்கானதும் காணித் துண்டை திட்டச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதற்கானதுமான ஒப்புதல் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சமுதாயம் சார்ந்த தாக்க தணிப்பு நடவடிக்கைகளுக்காக அது ஏற்றுக்கொள்ளப்படும். பின்னர், நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டின் விபரங்கள் காணித் துண்டை நன்கொடையாக வழங்கியவரின் ஒப்புதல், மற்றும் முறையான சாட்சிகளின் ஒப்புதல் உள்ளடக்கிய விபரங்கள் சட்ட ரீதியான ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட நிபந்தனைகள் அனைத்தையும் களப்பயணங்கள் மேற்கொள்வதன் மூலமாகவும், காணித் துண்டை நன்கொடையாக வழங்க முன்வருபவருடனான கலந்துரையாடல்களிற்கு ஊடாகவும், மற்றும் ஏனைய பங்குதாரர்களுடைய கலந்துரையாடல்களிற்கு ஊடாகவுமே சரிபார்த்து எந்தக்

கட்டாயத்திலும் வழங்கப்படாமல் நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது மாகாணத் திட்ட அல்லது மாவட்ட திட்ட அலுவலகத்தினுடைய பொறுப்பாகும்.

**ஒருவர் தானாக முன்வந்து காணித் துண்டை திட்ட செயற்பாடுகளிற்காக நன்கொடையளிக்கும் போதான சட்ட உடன்படிக்கை**

பின்வரும் ஒப்பந்தம் ………………ஆம் திகதி ……………………….. மாதம் ……………… ஆண்டு, திரு திருமதி செல்வி ………………………..……………………….. அடையாள அட்டை இலக்கம் ……………………….. வயது ……………………….. விலாசத்தில் ………………………..………………………..……………………….. கிரம சேவகர் பிரிவு ………………………..மற்றும் ……………………….. கிராம சேவையாளர் இலக்கத்தில் ……………………….. மாவட்டத்தில் ……………………….. ……………………….. ……………………….. ஆகிய பாட்டன் பாட்டியின் மகன் அல்லது மகளாகிய திரு திருமதி செல்வி ……………………….. ……………………….. ஆகிய எனக்கு அல்லது எங்களுக்கிடையில் இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

1. காணிப்பத்திர இலக்கம் ……………………….. இல் நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டின் வடக்குப் பக்கமாக ……………………….. ……………………….. கிழக்குத் பக்கமாக ……………………….. ……………………….. தெற்குப் பக்கமாக ……………………….. ……………………….. மேற்குப்பக்கமாக……………………….. ……………………….. அமைந்துள்ளது.

2. இந்தக் காணி உரிமையாளர் ……………………….. பரப்புள்ள காணித் துண்டை திட்டத்திற்கு மாற்றிக்கொடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்.

3. திட்டத்திற்காக நன்கொடையாக வழங்கப்பட்ட காணித் துண்டு பின்வரும் விடயங்களுக்குள் உட்பட்டிருக்கவில்லை (காணி ஆக்கிரமிப்பாளர்கள், ஆக்கிரமித்துள்ளவர்கள், மரங்கள், பயிர்கள், கட்டுமானங்கள், கட்டமைப்புக்கள் உட்பட ஏனையவை, அடகு, ஈடு அல்லது குத்தகை முதலான கடமைகள், கடன்களுக்கான பிணைகள்) எனக் காணி உரிமையாளர் சாட்சியமளிக்கின்றார்.

4. இதன் மூலம் காணி உரிமையாளர் தானாக முன்வந்து நன்கொடையாக வழங்கிய ……………………….. காணித் துண்டில் சமுதாய நலன் கருதி மேற்கொள்ளப்படும் கட்டுமான மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக ……………………….. ……………………….. கிராம சேவகர் பிரிவில், ……………………….. ……………………….. அமைவிடத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் கமத்தொழில் அமைச்சின் கீழாக நடைமுறைப்படுத்தப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினால் செயற்படுத்தப்படுகின்றது.

5. இந்த சொத்தை வழங்குவதற்கு பதிலீடாக காணி உரிமையாளர் எந்தவொரு இழப்பீடுகளையும் கோரமாட்டார். கட்டுமான செயற்பாடுகளின் போது எந்தத் தடைகள் ஏற்பட்டாலும் சட்ட விதி முறைகளின் படி அதனைத் தடுக்து இடை நிறுத்த முடியாது.

6. நன்கொடையாக வழங்கப்பட்ட இந்தக் காணியை ஏற்றுக்கொள்வதற்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் முகாமைத்துவ அலகு அல்லது கமத்தொழில் அமைச்சு உடன்படுகின்றது.

7. உப திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது அமுல்படுத்தும் முகவரின் பெயர் ……………………….. ……………………….. ……………………….. கட்டுமான மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளால் அருகிலுள்ள காணி, நில அமைப்பு அல்லது ஏனைய அமைப்புகளிற்கு அல்லது பிற சொத்துகளிற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

8. இந்த ஒப்பந்தத்தின் விதிகள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாளில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது.

………………………..
காணி உரிமையாளரின் கையொப்பம்
திகதி

………………………..
கிராம சேவையாளரின் கையொப்பம்
முத்திரை
திகதி

பிரதேச செயலாளரின் கையொப்பம்
முத்திரை
திகதி

சாட்சி 01 *(சமூக ஆராய்வுக்குழுவிலிருந்து)*

சாட்சி 02 *(திட்டத்தை அமுல்படுத்துபவர்களிலிருந்து)*